71. சேர்மங்களுக்கு பெயரிடும் பொழுது எதிர் அயனியின் பெயரை எவ்வாறு எழுத வேண்டும்?

(1) எம்மாற்றமுமின்றி முழுமையாக தனிமத்தின் பெயரை எழுத வேண்டும்.

(2) தனிமத்தின் பெயரின் முடிவில் 'ஐடு அல்லது ஏட்' என மாற்றி எழுத வேண்டும்.

(3) தனிமத்தின் பெயரின் முடிவில் 'இயம்' என மாற்றி எழுத வேண்டும்.

(4) மேற்கண்ட எதுவுமில்லை.

72. அலுமினியம் மற்றும் அயோடின் வினைபுரிந்து உருவாகும் கருஞ்சாம்பல் நிற சேர்மம் எது?

(1) அலுமினிய அயோடின் (2) அலுமினோ அயோடின்

(3) அலுமினியம் அயோடைடு (4) அலுமினைடு அயோடின்

73. கீழ்க்கண்டவற்றுள் சேர்மத்தின் பண்பு அல்லாதது எது?

(1) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமங்கள் குறிப்பிட்ட நிறை விகிதத்தில் வேதியியல் முறையில் இணைந்து சேர்மத்தை உருவாக்குகிறது.

(2) சேர்மத்தில் உள்ள பகுதிப் பொருள்களை இயற்பியல் முறைப்படி பிரிக்க இயலாது.

(3) சேர்மத்தில் உள்ள பகுதிப் பொருள்களை இயற்பியல் முறைப்படி பிரிக்க இயலும்.

(4) ஒரு சேர்மம் உருவாகும் போது வெப்பம் வெளியிடுதலோ அல்லது உறிஞ்சுதலோ நிகழ்கிறது.

74. கீழ்க்கண்டவற்றுள் சேர்மத்தின் பண்பு அல்லாதது எது?

(1) ஒரு சேர்மம் குறிப்பிட்ட உருகுநிலை மற்றும் கொதிநிலையைக் கொண்டுள்ளது.

(2) சேர்மத்தின் பண்புகள் அதன் பகுதிப் பொருள்களின் பண்புகளை ஒத்துள்ளன.

(3) சேர்மம் ஒரு படித்தானது.

(4) சேர்மத்தின் பண்புகள் அதன் பகுதிப் பொருள்களின் பண்புகளிலிருந்து மாறுபடுகின்றன.

75. பாறை, தாதுக்கள் போன்ற உயிரற்ற மூலங்களிலிருந்து பெறப்படும் சேர்மங்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

(1) கரிமச் சேர்மங்கள் (2) கனிமச் சேர்மங்கள்

(3) உயிரற்ற சேர்மங்கள் (4) உயிருள்ள சேர்மங்கள்

76. சுண்ணக்கட்டி, பளிங்கு, சலவை சோடா போன்றவை எச்சேர்மங்களுக்கு உதாரணம்?

(1) கரிமச் சேர்மங்கள் (2) கனிமச் சேர்மங்கள்

LIVEWORKSHEETS

(3) அணைவுச் சேர்மங்கள் (4) அனைத்தும்

77. தாவரங்கள் மற்றும் விலங்குகள் போன்ற உயிருள்ள மூலங்களிலிருந்து பெறப்படும் சேர்மங்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

(1) கரிமச் சேர்மங்கள் (2) கனிமச் சேர்மங்கள்

(3) உயிரற்ற சேர்மங்கள் (4) உயிருள்ள சேர்மங்கள்

78. (A): உயிரினங்களிலிருந்து பெறப்படும் சேர்மங்கள் கரிமச் சேர்மங்கள் என அழைக்கப்படுகின்றன.

(B): புவியிலிருந்து பெறப்படும் சேர்மங்கள் கனிமச் சேர்மங்கள் என அழைக்கப்படுகின்றன.

(1) A, B இரண்டும் தவறு (2) A, B இரண்டும் சரி

(3) A சரி B தவறு (4) A தவறு B சரி

79. பொதுவாக நெகிழிப் பொருள்கள் சிதைய ஆகும் காலம் ______.

(1) 500 ஆண்டுகள் (2) 50 ஆண்டுகள் (3) 750 ஆண்டுகள் (4) 1000 ஆண்டுகள்

80. பொருத்துக.

a) நீர் - i) சோடியம் குளோரைடு

b) சாதாரண உப்பு - ii) சோடியம் கார்பனேட்

c) சர்க்கரை - iii) ஹைட்ரஜன் ஆக்ஸைடு

d) ரொட்டி சோடா - iv) சோடியம் பை கார்பனேட்

e) சலவை சோடா - v) சுக்ரோஸ்

(1) a - iii b - ii c - iv d - v e - i (2) a - iii b - i c - v d - iv e - ii

(3) a - iii b - iv c - ii d - v e - i (4) a - ii b - iii c - iv d - v e - i

81. பொருத்துக.

a) சலவைத் தூள்- i) கால்சியம் கார்பனேட்

b) சுட்ட சுண்ணாம்பு - ii) கால்சியம் ஹைட்ராக்ஸைடு

c) நீற்றிய சுண்ணாம்பு - iii) கால்சியம் ஆக்ஸைடு

d) சுண்ணாம்புக் கல் - iv) கால்சியம் ஆக்ஸி குளோரைடு

(1) a - iii b - ii c - iv d - i (2) a - iii b - i c - ii d - iv

(3) a - iii b - iv c - ii d - i (4) a - iv b - iii c - ii d - i

LIVEWORKSHEETS

82. பொருத்துக.

f) நீர் - i) Na & Cl

g) சாதாரண உப்பு - ii) Na, H, C & O

h) சர்க்கரை - iii) H & O

i) ரொட்டி சோடா - iv) Na, C & O

j) சலவை சோடா - v) C, H & O

(1) f - iii g - ii h - iv i - v j - i (2) f - iii g - i h - v i - iv j - ii

(3) f - iii g - iv h - ii i - v j - i (4) f - ii g - iii h - iv i - v j - i

83. பொருத்துக.

e) சலவைத் தூள் - i) Ca, C, O

f) சுட்ட சுண்ணாம்பு - ii) Ca, H, O

g) நீற்றிய சுண்ணாம்பு - iii) Ca, O

h) சுண்ணாம்புக் கல் - iv) Ca, O, Cl

(1) e - iii f - ii g - iv h - i (2) e - iii f - i g - ii h - iv

(3) e - iii f - iv g - ii h - i (4) e - iv f - iii g - ii h - i

84. ஒரு ஹைட்ரஜன் குளோரைடு மூலக்கூறில் உள்ள ஹைட்ரஜன் மற்றும் குளோரின் அணுக்களின் எண்ணிக்கை ______.

(1) 1, 2 (2) 2, 1 (3) 1, 1 (4) 2, 2

85. நீர் மூலக்கூறில் உள்ள ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜன் அணுக்களின் எண்ணிக்கை ______.

(1) 1, 2 (2) 2, 1 (3) 1, 1 (4) 2, 2

86. (A): ஓர் அணுவைக் குறிப்பிடப் பயன்படுவது வேதி குறியீடு பயன்படுகிறது.

(B): ஓர் தனிமத்தைக் குறிப்பிட வேதிவாய்பாடு பயன்படுகிறது.

(1) A தவறு, B சரி (2) A சரி, B தவறு (3) இரண்டும் சரி (4) இரண்டும் தவறு

87. $H_2O$ ல் 2 என்பது எதைக் குறிக்கின்றது?

(1) ஹைட்ரஜன் மூலக்கூறுகளின் எண்ணிக்கை

(2) ஹைட்ரஜன் அணுக்களின் எண்ணிக்கை

(3) ஆக்ஸிஜன் மூலக்கூறுகளின் எண்ணிக்கை

(4) ஆக்ஸிஜன் அணுக்களின் எண்ணிக்கை

LIVEWORKSHEETS

88. இணைதிறனுக்கான வரையறை யாது?

(1) ஒரு தனிமம் மற்ற தனிமத்துடன் இணையக்கூடிய திறனே இணைதிறன் ஆகும்.

(2) தனிமத்தின் ஓர் அணுவுடன் இணையக்கூடிய ஹைட்ரஜன் அணுக்களின் எண்ணிக்கையே இணைதிறன் ஆகும்.

(3) இரண்டுமே இணைதிறனுக்கான வரையறை ஆகும்.

(4) இரண்டுமே இணைதிறனுக்கான வரையறை அல்ல.

89. கூற்று (A): ஹைட்ரஜன் எரியத் துணை புரியும்

கூற்று (B): ஆக்ஸிஜன் எரியும்

(1) கூற்று A மற்றும் B இரண்டும் சரி (2) கூற்று A மற்றும் B இரண்டும் தவறு

(3) கூற்று A சரி B தவறு (4) கூற்று A தவறு B சரி

90. பின்வருவனவற்றுள் தவறான இணை எது?

(1) ஹைட்ரஜன் - சூரியன் மற்றும் பிற விண்மீன்கள்

(2) ஹீலியம் - பலூன்

(3) நைட்ரஜன் - கொழுப்பு

(4) ஆக்ஸிஜன் - காற்று

91. பின்வருவனவற்றுள் தவறான இணை எது?

(1) சோடியம் - உப்பு

(2) இரும்பு - குளோரோஃபில்

(3) கோபால்ட் - காந்தம்

(4) நிக்கல் - நாணயம்

92. பின்வருவனவற்றுள் தவறான இணை எது?

(1) புரோமின் - புகைப்படத் தொழில்

(2) ஜெர்மேனியம் - குறைக்கடத்தி

(3) வனேடியம் - கம்பிச்சுருள்

(4) ரேடியம் - ஆபரணம்

93. மனித உடலில் காணப்படக்கூடிய தனிமங்கள் _______.

(1) 10 (2) 20 க்கு மேல் (3) 12 (4) 13

94. மனித உடலில் காணப்படக்கூடிய மிகையளவு (99 %) தனிமங்கள் _______.

LIVEWORKSHEETS

(1) 3 (2) 4 (3) 5 (4) 6

95. வேறுபடும் தனிமத்தை தேர்ந்தெடுக்க.

(1) குளோரின் (2) நொபிலியம் (3) கால்சியம் (4) சிலிக்கான்

96. ஆங்கில எழுத்துகளில் குறியீடுகளைக் குறிக்கும் முறையினை அறிமுகப்படுத்தியவர் யார்?

(1) ரசவாதிகள் (2) டால்டன் (3) பெர்ஸீலியஸ் (4) லவாய்சியர்

97. வரைபடக் குறியீடுகள் அமையாத முறை எது?

(1) ரசவாதிகளின் முறை (2) பெர்சீலியஸ் முறை

(3) டால்டன் முறை (3) 1, 2 மற்றும் 3

98. நீர் மூலக்கூறுகளில் உள்ள ஆக்ஸிஜனின் எண்ணிக்கை _______.

(1) 1 (2) 2 (3) 3 (4) 1, 2

99. ஓசோன் மூலக்கூறுகளில் உள்ள ஆக்ஸிஜனின் எண்ணிக்கை _______.

(1) 1 (2) 2 (3) 3 (4) 1, 2

100. நீரின் மூலக்கூறு வாய்பாடு _______.

(1) $H_2O$ (2) $HO_2$ (3) H2O (4) HO2

101. பொருத்துக.

a) சோடியம் குளோரைடு - i) $C_6H_{12}O_6$

b) குளுக்கோஸ் - ii) $CO_2$

c) கார்பன் டை ஆக்ஸைடு - iii) NaCl

d) அம்மோனியா - iv) $NH_3$

(1) a - iii b - ii c - iv d - i (2) a - iii b - i c - ii d - iv

(3) a - iii b - iv c - ii d - i (4) a - iv b - iii c - ii d - i

102. குறியீட்டின் அடிப்படையில் பொருத்துக.

a) இரும்பு - i) Al

b) தாமிரம் - ii) Ni

c) நிக்கல் - iii) Cu

d) அலுமினியம் - iv) Fe

(1 a - iii b - ii c - iv d - i (2) a - iii b - i c - ii d - iv

LIVEWORKSHEETS

(3) a - iii b - iv c - ii d - i (4) a - iv b - iii c - ii d - i

103. குறியீட்டின் அடிப்படையில் பொருத்துக.

a) ஆர்கான் - i) Cr

b) ஆர்சனிக் - ii) Ba

c) பேரியம் - iii) As

d) குரோமியம் - iv) Ar

(1) a - iii b - ii c - iv d - i (2) a - iii b - i c - ii d - iv

(3) a - iii b - iv c - ii d - i (4) a - iv b - iii c - ii d - i

104. குறியீட்டின் அடிப்படையில் பொருத்துக.

a) ஈயம் - i) I

b) துத்தநாகம் - ii) C

c) கார்பன் - iii) Pb

d) அயோடின் - iv) Zn

(1) a - iii b - ii c - iv d - i (2) a - iii b - I c - ii d - iv

(3) a - iii b - iv c - ii d - i (4) a - iv b - iii c - ii d - i

105. குறியீட்டின் அடிப்படையில் பொருத்துக.

a) கோபால்ட் - i) Ne

b) ஹீலியம் - ii) Mg

c) மக்னீசியம் - iii) Co

d) நியான் - iv) He

(1) a - iii b - ii c - iv d - i (2) a - iii b - I c - ii d - iv

(3) a - iii b - iv c - ii d - i (4) a - iv b - iii c - ii d - i

LIVEWORKSHEETS